2012 ஏப்ரல் 16]

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை, கும்பக்கரை அருவி ஆகிய இந்த மூன்றும் தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போகக்கூடிய இடங்களாக இருக்கின்றன. அவற்றைச் சுற்றுலாத் தலங்களாக அறிவித்து மேலும் development செய்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கும்பக்கரை பகுதியில் அதிகாரிகள் சென்று ஆய்வு செய்தபொழுது, பெரும்பாலான பகுதிகள் வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகள் என்று தெரிவித்திருக்கின்றார்கள். சோத்துப்பாறை பகுதியையும், மஞ்சளாறு அணைப் பகுதியையும் நேரடியாக ஆய்வு செய்து, அங்கு அரசு சார்பாக இடம் ஒதுக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கு சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற கட்டமைப்பு வசதிகள் செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

பேருந்து வசதி

***8910—திரு. தோ.பெ. பூனாட்சி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 ஏப்ரல் 16

மணச்சநல்லூரில் இருந்து சென்னைக்குக் குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மணச்சநல்லூரிலிருந்து நேரடியாகச் சென்னை செல்லும் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று மணச்சநல்லூரிலிருந்து சென்னைக்குக் குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி அவர்கள்.*

திரு. தோ.பெ. பூனாட்சி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், எனது தொகுதியின் தலைமையிடமான மணச்சநல்லூரிலிருந்து சென்னைக்குக் குளிர்சாதனப் பேருந்து இயக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்துள்ளேன். அரிசி ஆலைகள் அதிகமுள்ள மணச்சநல்லூரிலிருந்து சென்னைக்குக் குளிர்சாதனப் பேருந்தினை இயக்க வேண்டும். கேட்காமலேயே தருகின்ற தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது கோரிக்கையினையேற்று உடனடியாக குளிர்சாதனப் பேருந்தினை இயக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூடான சிவகங்கைப் பகுதியிலிருந்து குளுகுளுவென்று சென்னைக்கு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளிர்சாதனப் பேருந்தை இயக்குவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஐந்தாண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. அரசில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயக்கப்படுகின்ற எந்தப் புதிய பேருந்தும் வழங்கப்படவில்லை. ஒரு புதிய பேருந்துகூட வழங்கி மாற்றி அமைக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகள் அப்படியே இயக்கப்பட்டன. அந்தப் பேருந்துகள் எல்லாம் பழமை வாய்ந்தவையாக மாறிவிட்டன. பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் அந்தப் பேருந்துகளுடைய தரம் இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டு 3,000 பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கிய வகையில், 473 புதிய பேருந்துகளை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கி, அதில் 50 புதிய பேருந்துகளுக்கு கூண்டு கட்டி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து, இன்று மக்களுடைய பயன்பாட்டிற்கு அவை சென்று கொண்டிருக்கின்றன. அதைப்போல, நல்ல நிலையில் இருந்த அடிச்சட்டங்கள், இன்ஜின்கள் புனரமைக்கப்பட்டு, 100 பேருந்துகளை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புனரமைப்பதற்கு உத்தரவிடப்பட்டு, அதில் 11 பேருந்துகள் புனரமைக்கப்பட்டு, இன்று மக்களுடைய பயன்பாட்டிற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயக்கி வைத்திருக்கிறார்கள். அந்தவகையில் ஏழையெளிய மக்கள், அடித்தட்டு மக்கள், சாமானிய மக்களுடைய போக்குவரத்துச் சேவையை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த அளவுக்குப் பேருந்துகளைக் கொடுத்து, 2012–2013 ஆம் ஆண்டிலும் புதிதாக 3,000 பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய, அந்தச் சாதாரண போக்குவரத்து என்பது சாதாரண கட்டணத்தில், சிறப்பான சேவைகளை அளித்து வருகிறது. சிவகங்கை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தவாறு, அந்தப் பகுதிகளுக்குக் குளிர்சாதனப் பேருந்துகள் தேவை ஏற்படும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபையில் கூறிய இரண்டே நாட்களில் சங்கரன்கோவில்—சென்னை பேருந்து இயக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சங்கரன்கோவில்—கூடலூருக்கு ஒரு பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலிலிருந்து கூடலூருக்குப் புதிய பேருந்து வழித் தடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியிலிருந்து தஞ்சை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணிக்கு பக்தர்கள், குறிப்பாக இந்துக்களும், இஸ்லாமிய சமுதாய மக்களும், கிறிஸ்துவ மக்களும் வழிபடுவதற்குச் செல்கிறார்கள். எனவே, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, தஞ்சைக்கு மேலூரிலிருந்து குளிர்சாதனப் பேருந்தை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த வழித் தடங்களில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.*